புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஏப்ரல் 18, 2024 • புரட்சி 24 • முழக்கம் 14 • விலை ரூ.3.00

# திருப்பூர் சங்கீதா மீது பாஜகவினர் தாக்குதல்!
## ஜி.எஸ்.டி. குறித்து கேள்வி எழுப்பியதால் வெறிச்செயல்

*__திருப்பூர் :__ திராவிடர் விடுதலைக் கழகத்தின் திருப்பூர் மாவட்ட அமைப்பாளரான தோழர் சங்கீதா ஆத்துப்பாளையம் பகுதியில் துணிக்கடை ஒன்றை நடத்தி வருகிறார். கழக நிகழ்வுகளிலும், ஆர்ப்பாட்டங்களிலும் குடும்பத்தோடு பங்கேற்பவர் தோழர் சங்கீதா.*

*கடந்த ஏப்ரல் 12ஆம் தேதி அன்று திருப்பூர் மக்களவைத் தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிடும் ஏ.பி.முருகானந்தத்திற்கு ஆதரவாக பாஜகவினர் ஆத்துப்பாளையம் பகுதியில் வாக்கு சேகரிக்க வந்திருந்தனர். அப்போது அங்கு துணிக்கடை நடத்தி வந்த சங்கீதாவிடம் பாஜகவினர் வாக்கு சேகரிக்க சென்ற போது நாப்கின், அரிசி, பெட்ரோல், டீசல் மற்றும் காஸ் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அனைத்திற்கும் ஒன்றிய அரசு ஜிஎஸ்டி விதித்தது குறித்து சங்கீதா கேள்வி எழுப்பினார்.*

*இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத பாஜகவினர் சங்கீதாவின் கடைக்குள் வந்து “நீ யார் கேள்வி கேட்க?” என்று கேட்டு தகாத வார்த்தைகளில் பேசி கடுமையாக தாக்கினார்கள். அப்போது “நான் கேள்விதானே கேட்கிறேன். பதில் சொல்ல முடியவில்லை என்றால் தாக்குவீர்களா?” என கேட்டார். ஆனால் பாஜவினர் சங்கீதாவை தொடர்ந்து தகாத வார்த்தைகளால் திட்டி அடித்தனர்.*

*இது தொடர்பான காணொளி இணையத்தில் வைரலானது. இந்த சம்பவம் குறித்து சங்கீதா 15 வேலம்பாளையம் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். இதன்பேரில், போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்நிலையில் பாஜக மாவட்ட செயற்குழு உறுப்பினரான சின்னசாமி மீது 2 பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இந்த நிலையில் சின்னசாமி தற்போது தலைமறைவாகி உள்ளார்.*

*இந்த சம்பவத்திற்கு தமிழ்நாட்டில் பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனத்தை தெரிவித்துக் வருகின்றனர். இது தொடர்பாக உரிய நடவடிக்கையை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட சங்கீதாவுக்கு உரிய நீதியைப் பெற்றுத்தர வேண்டுமென சமூகவலைத்தளங்களில் பலரும் பதிவிட்டு வருகின்றனர்.*

**பாஜகவினர் தாக்குதல் குறித்து சங்கீதா கூறியதாவது:**

*எங்களது பகுதியில் பாஜகவினர் பிரசாரத்திற்கு வந்தனர். அப்போது பெண்களுக்கான பாதுகாப்பை பாஜ ஆட்சியில்தான் வழங்கி உள்ளோம் என தெரிவித்தனர். அப்போது நான்*



*பெண்கள் பயன்படுத்தும் நாப்கின் அதற்கு கூட அதிக அளவு ஜிஎஸ்டி விதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருட்களுக்கும் அதிக அளவு விதிக்கப்பட்ட ஜிஎஸ்டியால் பெண்கள் பலரும் பாதிக்கப்பட்டுவருகிறார்கள் என தெரிவித்தேன். எனது அருகில் இருந்தவர்கள் அரிசி விலை உயர்வு உள்ளிட்ட விலை உயர்த்தப்பட்ட பொருட்கள் குறித்து தெரிவித்தனர். அங்கேயே சிலர் அவர்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர். நான் கடைக்கு வந்துவிட்டேன். கடைக்குள் புகுந்த 10 பேர் என்னை தாக்கினார்கள். எனது செல்போனையும் பிடுங்கி வீசினர். சின்னச்சாமி என்பவர் என்னை தாக்கினார். மிகவும் மோசமான வார்த்தைகளால் என்னை திட்டினார். பெண்கள் பாதுகாப்பு குறித்து இவர்கள் பேசுகிறார்கள். கேள்வி கேட்ட என்னை கடுமையாக தாக்குகிறார்கள், எனவே எனக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். என்னை தாக்கிய பாஜ நிர்வாகிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கூறினார்.*

***இந்த சம்பவம் தொடர்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், அதிமுக, தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர், டி.ஆர். பி.ராஜா ஆகியோர் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.***

*திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பராயன், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினரும், திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளருமான செல்வராஜ், திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார், 15 வேலம்பாளையம் பகுதி திமுக செயலாளர் இராமதாசு, விவசாய சங்க பொறுப்பாளர் இரத்தினசாமி, 10வது வார்டு மாமன்ற உறுப்பினர் பாலு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி நகரச் செயலாளர் நந்தகோபால், கண்ணகி, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி மாநில செயற்குழு உறுப்பினர் ரவி, செல்வராஜ், சேகர், தந்தை பெரியார் திராவிடர் கழக ஒருங்கிணைப்பாளர் அங்க குமார், மாநகரத் தலைவர் முத்து குமார் மாவட்டச் செயலாளர் இரமேசு பாபு, கார்த்திக், நவீன மனிதர்கள் குழு தலைவர் பாரதி சுப்பராயன், செயலாளர் சுரேசு, அமைப்புச் செயலாளர் அருண், துணைச் செயலாளர் லெனின், செந்தில், பிரகாசு, திராவிடர் கழக வழக்கறிஞர் பாண்டியன், சென்னியப்பன், திருப்பூர் மாவட்டத் தலைவர் யாழ்.ஆறுச்சாமி, காட்டாறு குழு தாமரைக் கண்ணன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை, விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, மக்கள் அதிகாரம், ஆதிதமிழர் பேரவை, புரட்சிகர இளைஞர் முன்னணி உள்ளிட்ட தோழமை இயக்கத்தினர் நேரில் சந்தித்து நலம் விசாரித்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தனர்.*

### டி.ஆர்.பி.ராஜா கண்டனம்

இது தொடர்பாக அமைச்சர் டிஆர்பி ராஜா வெளியிட்டுள்ள கண்டன பதிவில், “முதலில் கோவையில் பாஜக வன்முறை. அடுத்து திருப்பூரில் கோழைத்தனமாக தன்னந்தனியாக நின்ற ஒரு இளம் பெண் மீது கொலைவெறித் தாக்குதல்! கோவையில் பாஜகவுக்கு தோல்வி நிச்சயம் என்றதும் வன்முறை வெறியாட்டம் ஆட துவங்கியுள்ளது பாஜக. திருப்பூரிலும் ஒரு பெண்மணி ஜி.எஸ்.டி அநியாயங்கள் குறித்து துணிவாகவும் நேர்மையாகவும் கேட்டதற்கு பா.ஜ.க.வின் 5 தடியர்கள் சேர்ந்து அந்த இளம் பெண்ணை தாக்கியுள்ளனர். பொதுமக்களின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கும் இந்த அடாவடி அராஜகக் கூட்டம் அமைதியான கோவை – திருப்பூருக்கும் தமிழ்நாட்டுக்கும் தேவையா? சிந்தியுங்கள்,”இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### கோவையில் திமுகவினர் மீது தாக்குதல்!

கோவை மாவட்டம் சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆவாரம்பாளைம் 28ஆவது வார்டு பகுதியில் தேர்தல் நடத்தை விதிகளை மீறி 11.04.2024 அன்று இரவு 10.40 மணியளவில் பாஜகவினர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இதனைத் தட்டிக்கேட்ட திமுகவினரை பாஜகவினர் கடுமையாக அடித்து உதைத்து தாக்கியுள்ளனர். இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக பாஜகவைச் சார்ந்த ஆனந்தகுமார், மாசாணி உள்ளிட்டோர் மீது 294 பி, 323, 147 உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் பீளமேடு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

### பாலியல் புகாரில் கைதான பாஜக நிர்வாகி!

பாஜக திண்டுக்கல் மேற்கு மாவட்ட முன்னாள் செயலாளரான மகுடீஸ்வரன், பழநி அருகே உள்ள சாமிநாதபுரத்தில் காலை உணவுத் திட்டப் பொறுப் பாளருக்கு பாலியல் தொல்லை அளித்துள்ளார். சம்மந்தபட்ட பெண் காவல்துறையில் புகார் அளித்த நிலையில், மகுடீஸ்வரன் தலைமறைவானார். இந்நிலையில் கர்நாடகாவில் பதுங்கியிருந்த அவரை ஏப்ரல் 10–ஆம் தேதி காவல்துறையினர் கைது செய்தனர்.

### நெல்லையில் அரசுப் பேருந்து ஓட்டுநர் மீது தாக்குதல்

நெல்லையில் அரசு பேருந்தின் முன்பக்க கண்ணாடியில் பாஜக ஆதரவு ஸ்டிக்கரை ஒட்ட முயன்றுள்ளார் பாஜக நிர்வாகியான மருதுபாண்டி. அரசு பேருந்தில் ஸ்டிக்கர் ஒட்டக்கூடாது எனக் கூறி, ஓட்டுநர் சுப்பிரமணியன் தடுக்க முயன்றுள்ளார். இதனால் ஆத்திரமடைந்து அரசு பேருந்து ஓட்டுநர் சுப்பிரமணியன் தலையில் பாட்டிலால் ஆவேசமாக தாக்கியுள்ளார் பாஜக பிரமுகர் மருதுபாண்டி. படுகாயமடைந்த சுப்பிரமணியன் அளித்த புகாரில், பாஜகவைச் சேர்ந்தமருதுபாண்டி கைது செய்யப்பட்டுள்ளார்.

### நாகையில் குடிசைகளை கொளுத்திய பாஜக!

நாகையில் பாஜக வேட்பாளர் ரமேஷை வரவேற்பதற்காக கோட்டாட்சியர் அலுவலகத்தின் தேசிய நெடுஞ்சாலை பகுதியில் பாஜகவினர்கள் பட்டாசு எடுத்துச் சென்றனர். இதைப்பார்த்த அப்பகுதி மக்கள் அருகே குடிசைகள் இருப்பதால் பட்டாசு வெடிக்க வேண்டாம் என்று கேட்டுள்ளனர். ஆனால் அதை பொருட்படுத்தாமல் பாஜகவினர் வேண்டுமென்றே பட்டாசு வெடித்துள்ளனர். தீப்பொறி குடிசை வீடுகளில் பட்டு பக்கிரிசாமி, சுப்பிரமணியன் என்ற இருவரின் வீடுகள் முற்றிலுமாக எரிந்தன. 2 குடும்பங்களின் ஒட்டுமொத்த வாழ்வாதாரத்தையும் சீரழித்த பாஜகவினரைக் கண்டித்து அப்பகுதி மக்கள் மறியலில் ஈடுபட்டனர்.

### திருவள்ளூர் பாஜக வேட்பாளரின் பின்னணி!

திருவள்ளூர் (தனி) தொகுதியின் பாஜக வேட்பாளராக பொன்.பால கணபதி என்பவர் அறிவிக்கப்பட்டுள்ளார். அதே கட்சியை சேர்ந்த சசிகலா புஷ்பாவிடம், இவர் பொது இடத்தில் நடந்துகொண்ட அநாகீரக காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி இருந்தன. இதுகுறித்து சசிகலா புஷ்பாவின் கணவர் ராமசாமி காவல்துறையில் புகார் ஒன்றையும் கொடுத்திருந்தார். ‘நாரி சக்தி’ என்று மேடைகளில் அம்மன் வேடங்களில் பெண்களை நிற்க வைத்து நரேந்திர மோடி நடித்துக்கொண்டிருக்கிறார். ஆனால் அவருடைய கட்சியில் பாலியல் சீண்டலுக்கு உள்ளாகும் பெண்களுக்கே நீதி கிடைப்பதில்லை. மாறாக, அத்தகைய நபர்களை அங்கீகரித்து வேட்பாளராகவும் அறிவித்திருக்கிறார்கள்.

தலையங்கம்

## பாஜகவை ஏன் வீழ்த்த வேண்டும்?

ஆரிய – திராவிட யுத்தமாகவே களத்தை இரண்டாகப் பிரித்திருக்கிறது நாடாளுமன்றத் தேர்தல். மீண்டும் ஒருமுறை பாஜக அரசு அமைந்தால், அது எத்தகைய பேராபத்தை விளைவிக்கும் என்பதை, பாஜகவினர் பரப்புரையில் உதிர்க்கும் வார்த்தைகளே நமக்கு எச்சரிக்கையூட்டுகின்றன. வடசென்னை தொகுதிக்குட்பட்ட திருவிக நகர் பகுதியில், திமுக வேட்பாளர் கலாநிதி வீராசாமியை ஆதரித்து ஏப்ரல் 1–ஆம் தேதி பரப்புரையில் ஈடுபட்ட, திமுக நிர்வாகி தமிழ்வேந்தன், “மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், நாம ஆட்டுக்கறியும் சாப்பிட முடியாது, மாட்டுக்கறியும் சாப்பிட முடியாது. கோழிக்கறியும் சாப்பிட முடியாது. தயிர் சாதம், புளி சாதம்,, சாம்பார் சாதம் மட்டும் தான் சாப்பிட முடியும்” என்று மக்கள் மத்தியில் பேசினார்.

தேர்தல் வெற்றிக்காக தரைமட்ட அளவுக்கு திமுக விமர்சனங்களை வைப்பதாக இந்த காணொளியை பகிர்ந்து பாஜகவினர் வசைபாடினர். ஆனால் அதுதான் நடக்கப்போகிறது என்பதை பிரதமர் மோடியே நேரடியாக எச்சரித்துவிட்டார். ராஷ்டிரிய ஜனதா தளம் தலைவர்கள் லாலு பிரசாத் மற்றும் தேஜஸ்வியுடன் இணைந்து காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி ஆட்டிறைச்சியும், மீனும் சாப்பிட்டதை அரசியலாக்கியிருக்கிறார் பிரதமர் மோடி. “புனித சாவான் மாதத்தில் எதிர்க்கட்சியினர் இப்படி ஆட்டிறைச்சியும், மீனும் உண்கிறார்கள்” என்று பேசியிருக்கிறார் மோடி.

மக்கள் வீடுகளில் மாட்டிறைச்சி வைத்திருந்தாலோ அல்லது வாங்கிச் சென்றாலோ தாக்கியது போய், இப்போது எதிர்க்கட்சியினர் வீடுகளின் சமையலறை வரை நுழைய ஆரம்பித்துவிட்டார்கள். அடுத்து மீண்டும் ஆட்சிக்கு வந்தால், அமலாக்கத்துறை, வருமான வரித்துறை போல இறைச்சி சமைப்பதை கண்காணித்து தடுக்கவும், ஒவ்வொரு வீடாக சோதனையிடவும் மோடி ஒரு புதிய துறையை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை. குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்க 10 ஆண்டுகளில் மோடி அரசு சிறு துரும்பைக்கூட கிள்ளிப்போடவில்லை. ஆனால் மதத்தின் பெயரால் யார் எதை உண்ண வேண்டும், எதை உண்ணக்கூடாது என்று பட்டியல்போட துணிந்துகொண்டிருக்கிறது பாஜக அரசு.

ஆனால் நாட்டு மக்களின் வாழ்வாதாரம் என்ன நிலையில் இருக்கிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேர்தலையொட்டி லோக்நிதி சி.எஸ்.டி.எஸ். நிறுவனம் மக்கள் மத்தியில் ஆய்வு ஒன்றை நடத்தியிருக்கிறது. அதில் கடந்த 5 ஆண்டுகளில் விலைவாசி கடுமையாக எகிறியிருக்கிறது என்று 71% பேர் கூறியுள்ளனர். வேலையின்மை விகிதம் 8%–மேல் அதிகரித்திருக்கிறது இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் கூறுகிறது. கொரோனா பேரிடரில்தான் 8%–ஐ தாண்டியது. இப்போதும் 8%–ஐ தாண்டியிருப்பது என்பது மிக மோசமான நிலை. குடும்பங்களின் சேமிப்பு கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சரிந்திருக்கிறது, கடன் அதிகரித்திருக்கிறது. இந்தியாவின் 10% பேரிடம் 77% செல்வங்கள் குவிந்திருக்கிறது. சுமார் 67 கோடி ஏழைகளிடம் நாட்டின் மொத்த செல்வத்தில் 1% மட்டுமே இருக்கிறது. 10 ஆண்டுகால பாஜக செய்த சாதனைகள் இவைதான்.

ஆனால் இவற்றுக்கு தீர்வு காண திட்டம் தீட்டாமல், அடுத்தவர் தட்டில் என்ன உணவு இருக்கிறது என சோதனை செய்து கொண்டிருக்கிறார்கள். அத்துடன், ஒவ்வொரு சட்டமாகத் திருத்திக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு, ஒட்டுமொத்த அரசியலமைப்பையும் மாற்றிவிடலாம் என்றும் திட்டம் போட்டிருக்கிறது பாஜக. இம்முறை 400 தொகுதிகளுக்கு மேல் வென்றால்தான், அரசியலமைப்பை திருத்த முடியும் என மார்ச் மாத தொடக்கத்தில் உத்தர கர்நாடகாவை சேர்ந்த பாஜக எம்.பி. அனந்தகுமார் ஹெக்டே கூறினார். இப்போது அயோத்தி எம்.பி. லாலு சிங்கும் தேர்தல் பரப்புரையில் இதே கருத்தைக் கூறியிருக்கிறார். கடந்த ஒரு மாதத்தில் மட்டும் பா.ஜ.க.–வினர் 3 பேர் இக்கருத்தை வெளிப்படுத்தியிருக்கின்றனர். இம்முறை 400க்கு மேல் வெல்ல வேண்டும் என்பதுதான் பாஜகவின் நோக்கமாகவும் வெளிப்படுத்தப்படுகிறது. ஆக, அரசியலமைப்பை தூக்கியெறிய பாஜக துணிந்துவிட்டது என்ற எச்சரிக்கையை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, தென் மாநிலங்களில் கால் பதிக்கவே தடுமாறும் பாஜக, வட மாநிலங்களை மட்டுமே வைத்து பெரும்பான்மை பெறுவதற்கான வழிகளையும் தேட ஆரம்பித்துவிட்டது. ஏற்கெனவே 888 பேர் அமரும் வகையில் புதிய நாடாளுமன்றத்தைக் கட்டிவிட்டார்கள். தேர்தலுக்குப் பின் தொகுதிகளை மறுசீரமைக்க திட்டமிட்டிருக்கிறார்கள். அவ்வாறு மறுசீரமைக்கப்பட்டால் தமிழ்நாட்டின் மொத்த தொகுதிகளில் 39–இல் இருந்து 31–ஆகக் குறையும். ஒட்டுமொத்த தென்மாநிலங்களும் 26 தொகுதிகளை இழக்கும். ஆனால் ஏற்கெனவே அதிக தொகுதிகளை வைத்திருக்கும் உத்தரப் பிரதேசம், பீகார், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய 4 மாநிலங்கள் மட்டுமே 31 தொகுதிகளைக் கூடுதலாகப் பெறும். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதற்காக தென் மாநிலங்களுக்கு ஏற்கெனவே நிதிப் பகிர்வில் பெரும் அநீதி இழைக்கப்படுகிறது. இப்போது தொகுதிகளையும் குறைத்து தென் மாநிலங்களின் தேவையை இல்லாமல் ஆக்கச் செய்ய முயல்கிறார்கள்.

எச்சரிக்கையோடு பாஜகவை விரட்டி அடிப்போம்.

## மேட்டூர் ஆர்.எஸ்–இல் தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டம்!




மேட்டூர் ஆர்.எஸ் நகரக் கழக சார்பில் “மோடி ஆட்சி தொடரலாமா?” நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டம் 10.04.2024 அன்று மேட்டூர் ஆர்.எஸ் வணிக வளாகம் முன்பு நடைபெற்றது.

பாடகர் கோவன் குழுவின் கலை நிகழ்ச்சி மற்றும் கலகக்காரன் குழுவின் தெருக்கூத்து நாடகத்துடன் பொதுக்கூட்டம் தொடங்கியது.



பொதுக் கூட்டத்திற்கு கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல் தலைமை தாங்கினார், RS பகுதித் தலைவர் முரளிதரன் வரவேற்புரையாற்றினார்.

திமுக தலைமைக் கழகப் பேச்சாளர் கவிஞர் வைரமணி, கழக மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் உரையாற்றினார்கள்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். நிறைவாக RS பகுதி செயலாளர் கு.விவேக் நன்றி கூற பொதுக் கூட்டம் நிறைவு பெற்றது.

## இந்தியாவா? பாரதமா?




**சென்னை :** நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 20வது சந்திப்பு “இந்தியாவா? பாரதமா?” என்ற தலைப்பில் புரட்சியாளர் அம்பேத்கரின் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி மாலை 6 மணிக்கு கழகத் தலைமை அலுவலகத்தில் அன்னூர் விஷ்ணு தலைமையில் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் ஆர்.எஸ்.எஸ்–ம் – ‘பாரதமும்’ என்ற தலைப்பில் ஊடகவியலாளர் பிரகாசும், ‘பாரதத்தில்’ தீண்டத்தகாதவர்களின் நிலை என்ற தலைப்பில் ஆர்த்தியும் சிறப்புரையாற்றினார்கள்.

அடுத்ததாக ‘பாரதத்தை’ எதிர்க்கும் தெற்கு என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார்.

இதில் 40க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## மின்னணு ஏற்றுமதியில் தமிழ்நாடு சாதனை!

இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் மின்னணு பொருட்களில் 30 விழுக்காடு தமிழ்நாட்டில் இருந்தே ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஒன்றிய வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் புள்ளி விவரங்களின்படி, தமிழ்நாட்டின் மின்னணு பொருட்கள் ஏற்றுமதி 7.4 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. ஆனால் இது 2021ஆம் ஆண்டில் 1.7 பில்லியன் டாலராகவே இருந்தது. இந்தியாவின் ஒட்டுமொத்த ஸ்மார்ட்போன் ஏற்றுமதியில் காஞ்சிபுரம் மட்டுமே 40% பங்கைக் கொண்டிருக்கிறது. தி.மு.க அரசு கடந்த 3 ஆண்டுகளில் முதலீடுகளை அதிகரிக்க மேற்கொண்ட முயற்சிகளே இதை சாத்தியமாக்கி உள்ளது.

## சேத்துப்பட்டு இராசேந்திரன் இல்லத் திறப்பு விழா



வட சென்னை : வட சென்னை மாவட்டக் கழக அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன் – அலமேலு ஆகியோரின் இல்லத் திறப்பு விழா 14.04.2024 காலை 11:30 மணியளவில் அயனாவரம் முனுசாமி தெருவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தபெதிக தலைவர் ஆனூர் ஜெகதீசன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இதில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர், மாவட்டச் செயலாளர் உமாபதி, இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார் மற்றும் தோழர்கள் – குடும்ப உறவுகள் திரளாக கலந்து கொண்டனர்..

நிறைவாக கழகம் சார்பில் நினைவு பரிசாக புத்தர் சிலையை கழகத் தலைவர் வழங்கினார்.

# ரூ.12,000 கோடிக்கு மேல் சுருட்டிய பாஜக அடுத்தடுத்து அம்பலமாகும் மெகா ஊழல்கள்!

அமலாக்கத்துறை, சிபிஐ, வருமான வரித்துறை மூலம் நிறுவனங்களை மிரட்டி தேர்தல் பத்திர திட்டம் மூலம் ரூ.12,000 கோடிக்கு மேல் ஒன்றிய பாஜ சுருட்டிய விவகாரம் வெளிச்சத்துக்கு வந்ததை தொடர்ந்து, 'பிஎம் கேர்ஸ்' நிதித் திட்டம் மூலம் பாஜ செய்த முறைகேடுகளை முழுமையாக வெளிக் கொணர வேண்டும் என எதிர்க்கட்சிகள் சட்டப்போராட்டத்தைத் துவக்கியுள்ளன. தேர்தல் பத்திர திட்டம் மூலம் திரட்டிய நிதி விவரத்தை மறைக்க ஒன்றிய பாஜ அரசும், பாரத ஸ்டேட் வங்கியும் சேர்ந்து எந்த அளவுக்கு முட்டுக்கட்டை போட்டனவோ, அதைவிட தீவிரமாக பிஎம் கேர்ஸ் திட்ட நிதி விவரத்தை மறைக்க முயற்சி செய்து வருகிறது பாஜ.

இது தொடர்பாக பல்வேறு நீதிமன்றங்கள் நோட்டீஸ் அனுப்பியும் ஒன்றிய அரசு வாய் திறப்பதாக இல்லை. நீதித்துறையையே தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளதை போல, எந்த நோட்டீசுக்கும் முறையான பதில் தராமல் அலட்சியம் காட்டி வருகிறது. கொரோனா தொற்று இந்தியாவில் பரவியது 2020 ஜனவரி 30ம் தேதி கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் தீவிரமான பிறகு, ஒன்றிய, மாநில அரசுகளுக்கு அதிக செலவினமும், நிதித் தேவையும் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து 2020 மார்ச் 27ம் தேதி, 'பிஎம் கேர்' என்ற திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.



கொரோனா தொற்றை எதிர்கொள்ள உதவும் வகையில் இந்த திட்டத்தில் தனி நபர்கள், நிறுவனங்கள் நிதி வழங்கலாம். இவ்வாறு வழங்கப்படும் நிதி முழுமைக்கும் வரி விலக்கு உண்டு என தெரிவிக்கப்பட்டது. நிதி வழங்குவோர் முழுமையான வரி விலக்கு பெறும் வகையில், வரி மற்றும் இதர சட்ட விதிகள் திருத்தம் 2020, வருமான வரிச் சட்டம் ஆகியவற்றில் திருத்தம் செய்யப்பட்டு, ஜனாதிபதியின் ஒப்புதலும் பெறப்பட்டது.

இதன்பிறகு ஒன்றிய அரசு வெளியிட்ட அறிவிப்பில், பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் (*Prime Minister's National Relief Fund*) நிதி வழங்குவோருக்கு கிடைக்கும் வருமான வரிச் சலுகை போன்றே பிஎம் கேர் திட்டத்திலும் வருமான வரிச் சட்டம் 80ஜியின் படி முழு வரி விலக்கு பெறலாம். மொத்த வருவாயில் 10 சதவீத பிடித்தம் செய்வதும் பிஎம் கேர் நிதிக்குப் பொருந்தாது என சலுகைகள் அறிவிக்கப்பட்டன.

அறிவிக்கப்பட்டு 4 ஆண்டுகள் கடந்த நிலையிலும், இந்த திட்டம் எதற்காக கொண்டுவரப்பட்டது ? மொத்தம் எவ்வளவு நிதி வசூலானது? நிதி வழங்கியவர்கள் யார்? என பல கேள்விகளுக்கு இதுவரை விடையில்லை.

ஒன்றிய பாஜ அரசின் வெளிப்படைத் தன்மையே இல்லாத திட்டங்கள் வரிசையில் இதுவும் சேர்ந்து விட்டது. முறைகேடு இல்லை என்றால், இந்த விஷயத்தை இவ்வளவு காலமாக ஏன் மூடி மறைக்க வேண்டும்? பிஎம் கேர்சில் இதுவரை வசூலான தொகையை அரசு முன்வந்து அறிவிக்காவிட்டாலும், அவ்வப்போது வெளிவந்த செய்திகள் மூலம் ரூ.12,700 கோடி வசூலானதாக அறிய முடிகிறது. மூடி மறைத்தும் இவ்வளவு என்றால், உண்மையில் இதற்கு மேலும் வசூலாகியிருக்க நிறையவே வாய்ப்புகள் உள்ளன என பல தரப்பினரும் தெரிவிக்கின்றனர்.

'தேர்தல் பத்திரம்' போன்றே மோடி அரசின் மிகப்பெரிய மோசடி இது என வர்ணித்துள்ள காங்கிரஸ் தலைவர் ஜெய்ராம் ரமேஷ், "சில பெரிய நிறுவனங்கள் மட்டும் இந்தத் திட்டத்துக்கு வழங்கிய நிதியை வெளிப்படையாக அறிவித்துள்ளன. ரிலையன்ஸ் குழுமம் ரூ.500 கோடி, அதானி குழுமம் ரூ.100 கோடி, பேடிஎம் ரூ.500 கோடி, ஜெஎஸ் டபிள்யூ குரூப் ரூ.100 கோடி வழங்கியுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். தனியார் நிறுவனங்கள் மட்டுமின்றி, குறைந்த பட்சம் 38 ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் பிஎம் கேர்சுக்கு ரூ.2,105 கோடியை வழங்கியுள்ளன.

இதுதவிர, பொதுத்துறை நிறுவன ஊழியர்களின் பங்களிப்பாக ரூ.150 கோடி வந்துள்ளது. அவ்வப்போது வெளியான செய்திகளின் அடிப்படையில் மட்டுமே இதனை அறிய முடிகிறது. ஆனால், ஆர்டிஐ மூலம் பல முறை கேள்வி எழுப்பியும் விவரங்களைத் தர ஒன்றிய அரசு மறுத்து விட்டது. பிஎம் கேர்ஸ் இணையதளத்தில் நிதி பங்களிப்பு விவரங்கள் வெளியிடப்படும் எனக் கூறப்பட்டும், அதில் இதுவரை எந்த ஒரு தகவலையும் வெளியிடாமல் ஒன்றிய அரசு மறுத்து வருகிறது.

அதுமட்டுமின்றி, இன்றளவும் பிஎம் கேர்சுக்கு நிதி செலுத்துவதற்கான இணைப்புகள் அந்த இணையளத்தில் இடம் பெற்றுள்ளன. அதாவது, கொரோனா முடிவுக்கு வந்த பிறகும் வசூல் வேட்டையை ஒன்றிய அரசு நிறுத்துவதாக இல்லை. மேலும், பிரதமர் தேசிய நிவாரண நிதி (பிஎம்என்ஆர்எப்), தேசிய பாதுகாப்பு நிதி ஆகியவை பிரதமர் அலுவலகத்தால் நிர்வகிக்கப்படும் நிதி திட்டங்கள். அரசு நேரடியாக நிதி பெறுவதற்கு இந்தத் திட்டங்கள் இருக்கும்போது, பிரதமர் பெயரில் பிஎம் கேர்ஸ் என்ற அமைப்பை ஏற்படுத்தி,

அரசு இணைய முகவரியும் கொடுத்து வசூல் செய்து, அதற்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என ஒன்றிய அரசு கைவிரிப்பது எந்த வகையில் நியாயம்? வெளிப்படைத் தன்மையுடன் ஒன்றிய அரசு இருக்கிறதென்றால், இதில் முறைகேடு நடைபெறவில்லை என்பது உண்மையானால் சட்ட ரீதியாகவும், அதிகாரத்தின் மூலமாகவும் அனைத்து விவரங்களையும் மூடி மறைப்பது ஏன்? பலன் அடைந்தது யார்? யாரை காப்பாற்ற இத்தனை மெனக்கிடல்களை ஒன்றிய அரசு செய்கிறது என்ற கேள்விக்கு இதுவரை விடையில்லை.

**நன்றி : தினகரன்**

## கணக்கு காட்டாமல் சுருட்ட வசதியாக...

அவசர காலத்துக்கான நிவாரண நிதிக்காக தேசிய நிவாரண நிதி, தேசிய பாதுகாப்பு நிதி, பிரதமர் நிவாரண நிதி ஆகியவை உள்ளன. இதன் வரவு, செலவு கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு வெளியிடப்படும். ஆனால் இந்த தணிக்கை ஏதும் இல்லாமல், கிடைக்கும் பணம் முழுவதையும் சுருட்டும் வகையில் அமைக்கப்பட்டது தான் பி.எம்.கேர்ஸ் என்கிற குற்றச்சாட்டு இப்போது பூதாகரமாக எழுந்துள்ளது.

## வெண்டிலேட்டர் விலையில் கோல்மால்!

பல கோடிகளில் திரட்டிய நிதி எப்படி செலவழிக்கப்பட்டது என்பதற்கு சரியான பதில் ஏதும் இல்லை. 58,850 மேக் இன் இந்தியா வெண்டிலேட்டர்கள் ரூ.2000 கோடிக்கு வாங்கப்பட்டது, ரூ.1000 கோடி புலம் பெயர்ந்த தொழிலாளர் நலத் திட்டங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது, மருந்து, மாத்திரைக்கு 100 கோடி செலவானது என பொத்தாம்பொதுவாக கூறப்பட்டது. அதிலும் தில்லுமுல்லு நடந்துள்ளது. ஒரிஜினல் விலையை விட வெண்டிலேட்டருக்கு இரு மடங்கு அதிக விலையை கணக்கு காண்பித்துள்ளனர்.

வாங்கிய பணத்தில் அடிமாட்டு விலைக்கான செலவே செய்துவிட்டு மற்ற அனைத்தும் சுருட்டப்பட்டுள்ளது என்கிறார்கள். ஒன்றிய அரசு கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகளுக்கு வெண்டிலேட்டர்கள் வாங்கப்பட்ட விவரம் மற்றும் அதற்கு பிஎம் கேர்சில் இருந்து எவ்வளவு நிதி வழங்கப்பட்டது என கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் அஞ்சலி பரத்வாஜ் என்பவரால் கோரப்பட்டிருந்தது. அதில், டெல்லி டிஆர்டிஓ கொரோனா மருத்துவமனை மற்றும் ஆயுர்வேத மருத்துவமனைகளுக்கு 250 பிஎம் கேர்ஸ் வெண்டிலேட்டர்கள் வாங்கப்பட்டதும், அதற்கான செலவு பிஎம் கேர்சில் இருந்து மருத்துவமனைகளுக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரிய வந்தது.

மேலும் பொது சுகாதார சேவைகளுக்கான இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தொழில்நுட்ப பரிந்துரை குழு ஒப்புதல் இல்லாத 2 தனியார் நிறுவனங்களுக்கு வெண்டிலேட்டர் ஆர்டர் கொடுக்கப்பட்டதும் தெரிய வந்துள்ளது. பிஎம் கேர்ஸ் நேரடியாக ஆர்டிஐயில் பதில் தர மறுத்தபோதும், வேறுவழிகளில் திரட்டி சிறிதளவு தகவலிலேயே பெரும் மோசடி நடந்தது அம்பலம் ஆகியுள்ளது.

## லடாக் ஊடுருவலின் போது சீனாவில் இருந்து வந்த நிதி

பிஎம் கேர்சுக்கு இந்திய நிறுவனங்கள் மட்டுமின்றி, வெளிநாட்டு நிறுவனங்களும் நிதியுதவி வழங்கியுள்ளன. சீனாவின் டிக்டாக் நிறுவனம் ரூ.30 கோடி,மொபைல் போன் தயாரிப்பு நிறுவனங்களான ஷாவ்மி ரூ.10 கோடி, வாவே ரூ.7 கோடி வரை, ஒன்பிளஸ் ரூ.1 கோடி வழங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. குறிப்பாக லடாக் மற்றும் அருணாசல பிரதேச எல்லையில் சீனப் படைகள் ஊடுருவியபோதுதான் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது என, காங்கிரஸ் தலைவர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார். இதன்மூலம், சீனாவை எதிர்ப்பதாக கூறும் ஒன்றிய அரசின் நிலைப்பாடு சந்தேகத்துக்குரியதாக இருப்பதாக பல தரப்பினரும் தெரிவிக்கின்றனர்.

## தனியார் அறக்கட்டளைக்கு அரசு இணைய முகவரி ஏன்?

பிஎம் கேர்ஸ் நிதி விவரங்களை வழங்க ஒன்றிய அரசு தொடர்ந்து மறுத்து வருவதை எதிர்த்து பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன. இதுதொடர்பாக டெல்லி உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு ஒன்றிற்கு பதிலளித்த ஒன்றிய அரசு, பிஎம் கேர்ஸ் என்பது தனியார் அறக்கட்டளை அமைப்பு. இதனை ஒன்றிய அரசு கட்டுப்படுத்துவது கிடையாது.

எனவே, ஆர்டிஐ சட்ட விதிகளின்படி நிதி விவரங்களை வெளியிட முடியாது என தெரிவித்தது. ஆனால் பிஎம் கேர்ஸ் *https://pmcares.gov.in* என்ற இணைய முகவரி கொடுக்கப்பட்டுள்ளது. *gov.in* என்பது அரசு இணையதளங்களுக்கு மட்டுமே உரியது. அப்படியிருக்க, தனியார் அறக்கட்டளைக்கு இந்த முகவரியை ஒதுக்கியது ஏன் என்ற கேள்விக்கு இதுவரை விடையில்லை.

## மிரட்டி... உருட்டி...

அவசர காலத்துக்கான நிவாரண நிதிக்காக தேசிய நிவாரண நிதி, தேசிய பாதுகாப்பு நிதி, பிரதமர் நிவாரண நிதி ஆகியவை உள்ளன. இதன் வரவு, செலவு கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு வெளியிடப்படும். ஆனால் இந்த தணிக்கை ஏதும் இல்லாமல், கிடைக்கும் பணம் முழுவதையும் சுருட்டும் வகையில் அமைக்கப்பட்டது தான் பி.எம்.கேர்ஸ் என்கிற குற்றச்சாட்டு இப்போது பூதாகரமாக எழுந்துள்ளது.

## எம்.எல்.ஏக்கள், எம்.பிக்கள் என மக்கள் பிரதிநிதிகளை கட்டாயப்படுத்தி

சொல்லப்போனால் மிரட்டிக் கூட பி.எம். கேர்ஸுக்கு நிதியை சேர்த்திருக்கிறார்கள். தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 1 கோடி ரூபாய் அளவுக்கு நிதியளிக்க பாஜ நாடாளுமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்தப்பட்டுள்ளனர். இதை தவிர ராணுவ வீரர்கள், நீதிபதிகள், அரசு ஊழியர்கள் உள்ளிட்டோர் தங்கள் ஒரு நாள் ஊதியத்தை தர கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர் என்ற புகாரும் எழுந்துள்ளது.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# புரட்சியாளர் அம்பேத்கரின் 134–வது பிறந்தநாள் விழா!

# பல்வேறு மாவட்டங்களில் கழகம் மரியாதை

***புரட்சியாளர் அம்பேத்கரின் 134வது பிறந்தநாளை முன்னிட்டு கழக சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மரியாதை செலுத்தப்பட்டு சமத்துவநாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. அது பின்வருமாறு:-***



**சென்னை :** புரட்சியாளர் அம்பேத்கரின் 134வது பிறந்தநாளை முன்னிட்டு 14.04.2024 அன்று காலை 9 மணிக்கு ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள அம்பேத்கர் மணிமண்டபத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கொள்கை முழக்கங்கள் எழுப்பி மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், மாவட்டச் செயலாளர் உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன் மற்றும் பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள், தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மடிப்பாக்கம் பகுதிக் கழக சார்பில் ஆதம்பாக்கத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு கழகத் தோழர்கள் – ஆதரவாளர்கள் இணைந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

**ஈரோடு :** புரட்சியாளர் அம்பேத்கர் அவரது 134வது பிறந்த நாளை முன்னிட்டு பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக சார்பாக மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் குமார், திருமுருகன், விருதுநகர் செந்தில், கிருஷ்ணன், பழனிசாமி, சூரம்பட்டி பழனிசாமி, சத்தியமூர்த்தி, பிரபு, சத்தியராஜ், விவேகானந்தர், விஜய் ரத்தினம், ஆசிரியர் சிவக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**திண்டுக்கல் :** புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் 134வது பிறந்தநாளை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டக் கழக சார்பில் பழனியில் தந்தை பெரியார் சிலைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த அம்பேத்கரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து முழக்கமிட்டு மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இதில் மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாக்சிம் கார்க்கி, பழனி நகர அமைப்பாளர் பெரியார், ஒட்டன்சத்திரம் ஒன்றிய அமைப்பாளர் கபாலி, ஆயக்குடி பேரூர் அமைப்பாளர் சங்கர், தமிழ்நாடு மாணவர் கழக பொறுப்பாளர் ஆயுதன், மீனாலட்சுமி, தங்கமுத்து ஆகியோர் கலந்துகொண்டனர்.

**மதுரை :** புரட்சி அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு மேலூர் திவிக சார்பில் கல்லம்பட்டியில் மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி தலைமையிலும், சிம்மக்கல் அம்பேத்கர் சிலைக்கு மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி தலைமையிலும், தல்லாகுளம் அம்பேத்கர் சிலைக்கு மாவட்டக் கழக காப்பாளர் தளபதி தலைமையிலும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் முருகேசன், கண்ணன் காமாட்சி, வேங்கை மாறன், காளி, நடராஜன், அழகர், மாவட்டச் செயலாளர் மா.பா.மணி அமுதன் மற்றும் தமிழ் பித்தன் – தபெதிக, குமரன் – புரட்சிகர இளைஞர் முன்னணி மற்றும் திமுக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சி உள்ளிட்ட தோழமை அமைப்புத் தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

**சேலம் கிழக்கு :** புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் 134வது பிறந்தநாளை முன்னிட்டு 14.04.2024 அன்று சேலம் கிழக்கு மாவட்டக் கழக சார்பில் சேலம் (கி) மாவட்டத் தலைவர் சக்திவேல் தலைமையில் சேலம் மரவனேரி அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

உடன் சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட், சேலம் மாநகர அமைப்பாளர் பாலு, நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் கிருஷ்ணன், சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை, இளம்பிள்ளை சௌந்தரராஜன், சேலம் மாநகர செயலாளர் ஆனந்தி, சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவபிரகாஷ், மாநகர அமைப்பாளர் தேவராஜ், அருள்பாண்டியன், வெள்ளார் சிவா, சேலம் பரமேஷ், இளம்பிள்ளை மோகன்ராஜ், மூலப்பாதை கவியரசு, கோகுல்ராஜ், ஏற்காடு நான்சி, ஏற்காடு சேகுவேரா, யாழினி, சேலம் குமார் உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்.

ஆத்தூரில் கழக சார்பில் புரட்சியாளர் அம்பேத்கரின் 134வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது படத்திற்கு மாலை அணிவித்து சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

**திருப்பூர் :** ஆத்துப்பாளையம் பகுதிக் கழக சார்பில் புரட்சியாளர் அம்பேத்கரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

**கோவை :** புரட்சியாளர் அம்பேத்கரின் 134வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை மாநகரச் செயலாளர் வெங்கடேசன் தலைமையில் காந்திபுரம் பெரியார் சிலை முன்பு அம்பேத்கர் படம் வைத்து கொள்கை முழக்கங்கள் எழுப்பி இந்தியா கூட்டணியை வெற்றி பெற செய்திட உறுதிமொழி ஏற்கப்பட்டது.

**பெங்களூர் :** புரட்சியாளர் அம்பேத்கரின் 134வது பிறந்தநாளை முன்னிட்டு கர்நாடக சட்டப்பேரவை வளாகத்தில் அமைந்துள்ள அம்பேத்கரின் சிலைக்கு பெங்களூர் கழகத் தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**சேலம் மேற்கு :** புரட்சியாளர் அம்பேத்கரின் 134வது பிறந்தநாளை முன்னிட்டு மேட்டூர் நகரக் கழக சார்பில் மேட்டூர் அச்சங்காட்டில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராஜ், தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் சேட்டு குமார் மற்றும் மேட்டூர், மேட்டூர் RS பகுதி பொறுப்பாளர்கள், தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கள்ளக்குறிச்சி :** புரட்சியாளர் அம்பேத்கரின் 134வது பிறந்தநாளை முன்னிட்டு சங்கராபுரத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு கடுவனூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஏழுமலை தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் கடுவனூரில் அம்பேத்கரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மா.குமார், ரிஷிவந்தியம் ஒன்றிய தலைவர் இரா. கார்மேகம், கா.பசுமதி, ரிஷிவந்தியம் ஒன்றிய அமைப்பாளர் மு.நாகராஜ், நா.சுலோச்சனா, சே.வெ. ராஜேஷ், இராவணன், கா.எழிலரசி, கா.கயல், கா.இரணியா, கா.பெரியார் ச.சாரதி, ச.சாந்தகுமார், ச.ரித்திகா, கு.சிற்றரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கொளத்தூரில் தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டம்!



**கொளத்தூர் :** கொளத்தூர் நகரக் கழக சார்பில் "மோடி ஆட்சி தொடரலாமா?" நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டம் 09.04.2024 அன்று கொளத்தூர் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

பாடகர் கோவன் குழுவின் கலை நிகழ்ச்சி மற்றும் கலகக்காரன் குழுவின் தெருக்கூத்து நாடகத்துடன் பொதுக்கூட்டம் தொடங்கியது.

கூட்டத்திற்கு கொளத்தூர் நகரத் தலைவர் ராமமூர்த்தி வரவேற்புரையாற்றினார். சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் கு.சூரியகுமார் தலைமை தாங்கினார்.

இதில் திராவிடர் முன்னேற்றக் கழக கொளத்தூர் ஒன்றிய செயலாளர் மிதுன் சக்கரவர்த்தி, விடுதலை சிறுத்தைகள் கட்சி கொளத்தூர் ஒன்றிய செயலாளர் சேட்டு குமார், தமிழ்ப் புலிகள் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் தீனரட்சகன், திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி மாவட்ட து. அமைப்பாளர் முருகேசன், ஆதிதிராவிடர் நலத்துறை மாவட்ட தலைவர் நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

கழக கொளத்தூர் நகரச் செயலாளர் அறிவுச்செல்வன் நன்றி கூற பொதுக்கூட்டம் நிறைவுபெற்றது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted April 18, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran